**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.**

**O.S.No.51/2020**

2025ம் ஆண்டு ஜீன் திங்கள் 26 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.முத்துலட்சுமி | தாலுகா | : |
| த/ பெயர்<br>க/ பெயர் | :<br>: | கிராமம் | : |
| வயது | : | தொழில் | : |

**<u>பி.வா.சா.01</u>**
நாள் : 26.06.2025
நேரம் :11.30 AM

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் 4ம் பிரதிவாதியாவேன். எனக்காகவும் 6ம் பிரதிவாதிக்காகவும் பிரதிவாதிகள் தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

**1)** கடந்த 19.02.1991ம் தேதி தாவா 1வது லக்கச் சொத்து மற்றும் தாவா 2வது லக்கச் சொத்தில் தென்புறம் உள்ள 40 செண்டு ஆகிய சொத்துககளை 1, 2 பிரதிவாதிகள், 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த முதுகுளத்தூர் சார்பதிவக 90/1991 எண் கொண்ட பதிவு கிரையப்பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.1.**

**2)** கடந்த 20.09.2006ம் தேதி தாவாச் சொத்துககளை 3ம் பிரதிவாதி, குமரவேல் என்பவருக்கு எழுதிக்கொடுத்த முதுகுளத்தூர் சார்பதிவக 1003/2006 எண் கொண்ட பதிவு கிரையப்பத்திரம் அசல் **பி.வா.சா.ஆ.2.**

**3)** கடந்த 30.05.2020ம் தேதி தாவாச்சொத்துககளுக்கு 4ம் பிரதிவாதியின் பெயரில் ஏற்பட்ட பட்டா மாறுதல் உத்தரவு இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.3.**

**4)** தாவாச்சொத்துக்களுக்கு 4ம் பிரதிவாதி பெயதில் ஏற்பட்ட கணினி பட்டாக்கள் 3 அடங்கிய கோர்வை இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.4.**

**5)** தாவாச்சொத்துக்களுக்கு 4ம் பிரதிவாதி பெயரில் ஏறப்ட்ட கணினி அ பதிவேடு 3 அடங்கிய கோர்வை இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.5.**

**6)** தாவாச்சொத்துக்களுக்குரிய புலப்படம் 3 அடங்கிய கோர்வை இணையவழி நகல் **பி.வா.சா.ஆ.6.**

**7)** தாவாச்சொத்துக்களுக்கு 4 முதல் 6 பிரதிவாதிகள் பயிர்காப்பீடு செய்தததை காட்டும் பயிர் காப்பீடு அடங்கல் சான்றுகள் 6 கொண்ட கோர்வை அசல் **பி.வா.சா.ஆ.7.**

**8)** தாவா சொத்துக்களுக்குரிய அடங்கல் சாகுபடி கணக்கு உண்மை நகல் **பி.வா.சா.ஆ.8 ( பி.வா.சா.ஆ. 4 முதல் பி.வா.சா.ஆ.6 மற்றும் பி.வா.சா.ஆ.8 வழக்கிற்கு பிந்தைய ஆவணங்கள் என்பதாக வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனையின் பேரில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது)**

பிராதை தள்ளுபடி வேண்டுகிறேன்.

(வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.15.AM

சாட்சியின் கையொப்பம்.